DINAMALAR

PAGE NO: 04 DATE: 06.01.2024

# புதுச்சேரி பல்கலையில் சிறப்பு பயிலரங்கம்

## சர்வதேச வல்லுநர்கள் பங்கேற்பு

புதுச்சேரி, ஜன.6–

புதுச்சேரி பல்கலையில், 'போஸ்ட் குவாண்டம் கிரிப்டோகிராபி' சிறப்பு பயிலரங்கில், சர்வதேச வல்லுநர்கள் பங்கேற்று பயிற்சி வழங்கினர்.

புதுச்சேரி பல்கலை கணினி அறிவியல் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த 'சிம்பா' எனும் அமைப்பு இணைந்து, புதுச்சேரி பல்கலையில், 'போஸ்ட் குவாண்டம் கிரிப்டோகிராபி' என்ற இரு வார பயிலரங்கை நடத்தின.

கடந்த, 1978,ல் பிரான்ஸில் துவங்கப்பட்ட சிம்பா அமைப்பு, வளரும் நாடுகளில் கணிதம் தொடர்பான கல்வியையும் ஆராய்ச்சியையும் வளர்ப்பதை நோக்கமாகக்கொண்டது.

இப்பயிலரங்கை, சுவிட்சர்லாந்தின் நியொஷெத்தல் பல்கலையை சேர்ந்த, பேராசிரியர் எலிசா லாரண்ஸோ கார்சியா, புதுச்சேரி பல்கலை கணினி அறிவியல் துறை பேராசிரியர் சித்ரலேகா மற்றும் இணை பேராசிரியர் சுனிதா ஒருங்கிணைத்தனர். பேராசிரியர் சித்ரலேகா வரவேற்புரை வழங்கினார்.



புதுச்சேரி பல்கலையில், 'போஸ்ட் குவாண்டம் கிரிப்டோகிராபி' சிறப்பு பயிலரங்கில், பொறுப்பு துணைவேந்தர் தரணிக்கரசு தலைமை உரையாற்றினார்.

துவக்க விழாவிற்கு பல்கலைக்கழக கலை மற்றும் பண்பாட்டு இயக்குனர் கிளமெண்ட சகாயராஜா லூர்து தலைமை தாங்கினார். நிறைவு விழாவில் பொறுப்பு துணைவேந்தர் தரணிக்கரசு தலைமை உரையாற்றினார். சிம்பா இயக்குனர் கிறிப்டோ, பேராசிரியர் எலிசா லாரண்ஸோ கார்சியா சிறப்புரையாற்றினார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் புலத்தின் புல முதன்மையர் சிவ சத்யா மற்றும் கணினித்துறைத் தலைவர் ஜெயக்குமார் ஆகியோர் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்களின் முயற்சிகளை வாழ்த்திப் பேசினர்.

கணினித்துறை இணைப் பேராசிரியர் சுனிதா நன்றி கூறினார்.

DINAKARAN

PAGE NO: 12 DATE: 06.01.2024

புதுவை பல்கலைக்கழகத்தில்

# போஸ்ட் குவாண்டம் கிரிப்டோகிராஃபி 2 வார ஆராய்ச்சி பள்ளி



புதுவை பல்கலைக்கழகத்தில் 2 வார ஆராய்ச்சி பள்ளி தொடக்க விழாவில் பல்கலைக்கழக துணை வேந்தர் (பொ) தரணிக்கராசு பேசினார்.

புதுச்சேரி, ஜன. 6: புதுவை பல்கலைக்கழக கணினி அறிவியல் துறையும், பிரான்ஸ் நாட்டை சார்ந்த சிம்பா (CIMPA) என்ற அமைப்பும் இணைந்து புதுவை பல்கலைக்கழகத்தில் போஸ்ட் குவாண்டம் கிரிப்டோ கிராஃபி என்ற 2 வார ஆராய்ச்சி பள்ளியை நடத்துகின்றன. பயிலரங்கின் தொடக்க விழா பல்கலைக் கழகத்தின் கன்வென்ஷன் காம்ப்ளக்சில் நடந்தது. இதில் பல்கலைக்கழக கலை மற்றும் பண்பாட்டு இயக்குநர் கிளமெண்ட் சகாய ராஜா லூர்து தலைமை தாங்கினார். நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சித்ரலேகா வரவேற்றார். பல்கலைக்கழக துணை வேந்தர் (பொ) தரணிக்கராசு தலைமையுரையாற்றினார். புதுவை பிரெஞ்சு கான்செல் ஜெனரல் லீஸ் தால்போ பாரே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சிம்பாவின் இயக்குநர் எலிசா, சிம்பா இயக்குநர் கிறிப்ஃடோ சிம்பா, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புலத்தின் புல முதன்மையர் சிவசத்யா, கணினித்துறை தலைவர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிலரங்கில் கல்வி மற்றும் தொழில் துறையை சார்ந்த உலகின் தலைசிறந்த குவாண்டம் கிரிப்டோகிராஃபி வல்லுநர்கள் கலந்து கொண்டு பயிற்சியை வழங்குகின்றனர். இந்த ஆராய்ச்சி பள்ளியில் பேராசிரியர்களின் விரிவுரைகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் குழு விவாதங்கள் நடைபெறவுள்ளன. உலகெங்கிலும் உள்ள பல்வேறு வளரும் நாடுகளான ஈரான், மடகாஸ்கர், நேபாளம், பிலிப்பைன்ஸ் மற்றும் இந்திய கல்வி நிறுவனங்கள், தொழில்துறையை சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். கணினித்துறை இணை பேராசிரியர் சுனிதா நன்றியுரையாற்றினார்.

MAALAI MALAR

DATE: 06.01.2024

PAGE NO: 02

புதுவை பல்கலைகழகத்தில்

# சர்வதேச பயிலரங்கம்

புதுச்சேரி, ஜன.6—

புதுவை பல்கலைக்கழகத்தில், கணினி அறிவியல் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சிம்பா அமைப்பு இணைந்து 2 வார சர்வதேச பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கை சுவிட்சர்லாந்தின் நியொஷெந்தல் பல்கலைக்கழக பேராசிரியர் எலிசா லாரன்சோ கார்சியசா, புதுவை பேராசிரியர் சித்ரலேகா, இணை பேராசிரியர் சுனிதா ஒருங்கிணைத்தனர். பல்கலைக்கழக கலை பண்பாட்டு இயக்குனர் கிளமெண்ட் சகாயராஜா லூர்து தலைமை வகித்தார்.

துணைவேந்தர் தரணிக்கரசு தலைமை உரையாற்றினார். சிம்பா இயக்குனர் கிறிப்டோ, பேராசிரியர் எலிசா சிறப்புரையாற்றினர். முதன்மையர் சிவசத்யா, கணினி துறை தலைவர் ஜெயக்குமார் வாழ்த்தி பேசினர். இணை பேராசிரியர் சுனிதா நன்றி கூறினார்.